# அற இலக்கியங்களும் திருவிவிலியமும்

*முனைவர் ஞா. செல்வராக்கு*
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி, மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6486

## முன்னுரை

மனிதவாழ்வைசெம்மைப்படுத்திவாழ்வதற்கானவளமையைஅற இலக்கியங்கள் முன்வைக்கின்றன. திருவிவிலியம் கிறித்தவர்களின் புனித நூலாகவும் வாழ்வியல் நூலாகவும் உலகியல் நூலாகவும் திகழ்கின்றன. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் எனும் மொழிக்கேற்ப மனிதன் நலமுடன் வாழ வேண்டுமானால் உணவு முறைகளில் கவனம் செலுத்த வேண்டும். மானம் காக்கும் ஆடை, அலங்காரத்திற்காகவும் பிறர் மனதைக் கவரும் வகையில் அல்லாமல் ஒழுக்கத்தைப் பேணும் நிலையில் அணிய வேண்டும். ஒருவர் அணிந்திருக்கும் ஆடையைப் பொறுத்தே அவரின் செயல்பாடு களும் பண்புநலன்களும் வெளிப்படும். உறைவிடம் என்பது வசதி வாய்ப்பை நோக்கி இல்லாமல் தேவைக்கேற்ப வாழ்வதற்கான நெறியினை மனிதன் கடைப்பிடித்தால் அனைவருக்கும் வாழ்வு எனும் நிலையினை எளிதில் அடையமுடியும் எனும் கருத்தினை அற இலக்கியங்களும் திருவிவிலியமும் எடுத்துரைக்கின்றன. அற இலக்கியத்திலும் திருவிவிலியத்திலும் உணவு உடை உறவிடம் என்பவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாகத் திகழும் திறத் தினையும் அவற்றின் இன்றியமையாமையினையும் பயன்பாடு களையும் எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றன.

## திருவிவிலியம்

கிரேக்கம் மற்றும் இலத்தின் மொழியில் Biblia என்றும் ஆங்கிலத்தில் Bible என்றும் வழங்கப்படும். திருவிவிலியம் கடவுளால் இவ்வுலகிற்கு அளிக்கப்பட்ட நூல்களின் தொகுப்பாகும். திருவிவிலியம் என்று அழைக்கப்பெறும். நூல் இறை மக்களின் விசுவாசத்தால் வாழ வழிகாட்டுகின்ற நூலாகத் திகழ்கின்றது. இந்நூலின் மையப்பொருளாக கடவுள் மனிதர்களிடம் செலுத்தும் பக்தி நெறியையும் நம்பிக்கையையும் எடுத்துரைக்கின்றன. இறைமகனார் மீட்பராக இவ்வுலகில் அவதரித்து அவரின் மீட்புத்திடத்தால் மனிதர்கள் மீட்புப்பெறும் பாங்கினையும் எடுத்துரைப்பனவாக விளங்குகின்றன மாண்புமிக்க நூலாகத் திருவிவிலியம் திகழ்கின்றது.

**உணவின் இன்றியமையாமை**

பண்டைத் தமிழர்களின் உயர்வான வாழ்கைக்கையை மேம்படுத்துவதாக உழுது பயிர்செய்துஉண்டுவாழும்வாழ்க்கைமுறை அமைந்திருந்தது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மைத் தேவையாக உணவு இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கின்றது இதனையே

**"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்"**

**(நல்வழி பா-12)**

**தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது"**

**(கொன்றைவேந்தன் பா-46)**

சமூகத்தில் மனிதன் தானும் மகிழ்ந்து மற்றையோருக்கும் பயனுள்ளவராகத் திகழ வேண்டும் என்றால் அகற்கான தீர்வாக

**சீரைத் தேடின் ஏரைத்தேடு**

**(கொன்றைவேந்தன் பா29)**

மேழிச் செல்வம் கோழை படாது என்று உழவுத் தொழிலால் வரும் செல்வம் சிறுமை அடைவதில்லை என்பதையும் உரை முடிகின்றது.

தமிழர்கள்: நல்ல விளைச்சல் கிடைக்க நிலத்தைப் பயன்படுத்தினார்கள். இதனால் ஒருபலம்எடையுள்ளபுழுதியைக்கால்பலம் எடை வளரும்படி உழுது காயவிட்டால் ஒரு பிடி எரு கூட இட வேண்டியதில்லை என்பதை அறிந்திருந்தார்கள். மேலும் ஏரிட்டு உழுவது நல்லது எருவிடுவது அதனை விட நல்லது. பயிர் விளைந்த பின் களையெடுத்தல் நல்லது. பிறகு நீர் பாய்ச்சல் நல்லது. செழித்த பயிரைக் காவல் காப்பது அதை விட நல்லது எனும் நெறியை,

**"ஏரினும் நன்றல் எரு இடுதல் இட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"**

**(குறள் - 1038 )**

என்பது வள்ளுவர் வாக்கு.

**விவிலியம்**

**வாழ்க்கைத் தொழிலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்"**

வயலை உழுது பயன்படுத்து பிறகு உன் வீட்டைக் கட்டியெழுப்பத் தொடங்கு" என்கிறது.

விளைநிலத்தில் பயிருடன் களையும் வளர்வது போல இவ்வுலகத்திலும் நல்லோர், தீயோர் வாழத்தான் செய்கிறார்கள். அவர்களுள் நல்லோரையும் தீயோரையும் எளிதில் அடையாளம் காண இயலாது என்ற விவிலியச் சொற்களிருந்து மனிதர்களின் வாழ்வோடு இயைந்த வேளாண்மையை பேணிக் காக்க வேண்டும் என்பது புலனாகும்.

**அஃகமும் காசும் சிக்கெனத் தேடு**

**(கொன்றைவேந்தன் பா - 13)**

என உற்பத்தி செய்த தானியங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்கிறது கொன்றைவேந்தன்.

**"அஃகம் சுருக்கேல்"**

என ஔவையும் தானியங்களை அளவு குறைத்து விற்கலாகாது என்கிறார்.

கள்ளத் துலாக்கோல் ஆண்டவருக்கு அருவருப்பானது; முத்திரையிட்ட படிக்கல்லே அவர் விரும்புவது என்றும்

"தானியத்தைப் பதுக்கி வைப்பவனை மக்கள் சபிப்பார்கள்; தானியத்தை மக்களுக்கு விற்பவனோ ஆசி பெறுவான்" என வணிக நயத்தையும் மேலாண்மையையும் எடுத்து ரைக்கின்றது திருவிவிலியம்.

உண்ணும் உணவினை சரியான நேரத்தில் உண்ண வேண்டும். பாலோடு கூடிய அன்னமாக இருந்தாலும் உண்ணத் தகுந்த காலம் அறிந்து உண்ண வேண்டும் என்பதனை;

**"பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்"**

**(பா.60 கொன்றைவேந்தன்)**

என்று கூறிய ஔவைப் பிராட்டி அவ்வாறு உண்ணும் உணவை நீராடிய பின்பே உண்ண வேண்டும் என்கிறார்.

**நீராடி கால் கழுவி வாய்பூசி மண்டலம் செய்து**
**உண்டாரே உண்டார் எனப்படுவார்**

**(ஆசாரக்கோவை பா.18)**

மேலும்

**"உண்ணுங்கால் நோக்கும் திசை கிழக்குக் கண் அமர்ந்து**
**தூங்கான் துளங்காமை நன்கு இரீஇ - யாண்டும்**

***பிறிது யாது நோக்கான் உரையான்***
***தொழுது கொண்டு***
***உண்க உகா அமை நன்கு"***

***(ஆசாரக்கோவை - பா.20)***

என உண்ணும் உணவைக் கிழக்கு நோக்கி அமர்ந்து தூங்காமல் அசைந்தாடாமல் நன்றாக இருந்து எவ்விடத்திலும் மற்றவற்றையும் நினைக்காமல் பார்க்காமல் பேசாமல் உணவைத் தொழுது கையால் எடுத்து சிந்தாமல் நன்றாக உண்ண வேண்டும் என்கிறது ஆசாரக்கோவை.

இறைமகனார் இயேசு கிறிஸ்த்துவின் உலகலாவிய சிந்தனையாக

***"உன் எதிரி பசியோடிருந்தால் அவனுக்கு***
***உணவு கொடு;***
***அவன் தாகத் தோடிருந்தால் குடிக்கத்***
***தண்ணீர் கொடு"***

***(நீதி - 25:25)***

எனும் எதிரிக்கும் அன்பு செலுத்தும் மேன்மைமிகு அறச்செயலை நிலை நாட்டுகின்றது திருவிவிலியம்.

***"கருணை நிறைந்தவர் தம் உணவை***
***ஏழைகளோடு பகிர்ந்து உண்பார்;***
***அவரே ஆசி பெற்றவர்"***

***(நீதி 22:9)***

நாம் உண்ணும் உணவை மற்றவர்களோடு பகிர்ந்து உண்டால் இறைவனின் ஆசிர்வாதம் நமக்குக் கிடைக்கும் என்கிறது திருவிவிலியம்.

உணவு உண்ணும் நெறியில் உறங்கிக் கொண்டும் நின்று கொண்டும் கட்டிலின் மேலிருந்தும் உண்பது முறையாகாது என்பதனை

***"கிடந்து உண்ணார் நின்று உண்ணார்***
***வெள்ளிடையும் உண்ணார்***
***சிறந்து மிக உண்ணார் கட்டில் மேல்***
***உண்ணார்.***
***இறந்து ஒன்றும் தின்னற்க நின்று"***

***(ஆசாரக்கோவை - பா.23)***

எனும் ஆசாரக்கோவை பாடல் உணர்த்துகின்றது.

***"பசிந்திருப் போருக்காக உன்னையே***
***கையளித்து***
***வறியோரின் தேவையை நிறைவு***
***செய்வாயானால்***
***இருள் நடுவே உன் ஒளி உதிக்கும்;***
***இருண்ட உன்நிலை நன்பகல் போல் ஆகும்"***

***(ஏசாயா 58:10)***

எனும் சிந்தனை வரிகள் வறுமையைப் போக்க ஒலிபிறப்பிக்க முற்படும் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இருள்நீங்கி அகலாது துன்பம் நீங்கி மகிழ்ச்சி என்றுமே நிலைத் திருக்கும் எனக் குறிப்பிடுகின்றார் இயேசு கிறிஸ்து.

**உடையின் இன்றியமையாமை**

ஒருவன் மற்றொருவருக்குக் கொடுப்பதைப் பொறாமையால் இன்னொருவன் தடுத்து நிறுத்தினால் தடுத்து நிறுத்தியவரும் அவனுடைய சுற்றத்தாருடன் உடுத்துவதற்கு ஆடையும் உண்ண உணவும் இல்லாமல் கெடுவார்கள் என்பதனை வள்ளுவர்

***"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்***
***உடுப்பதூஉம்***
***உண்பதூஉம் இன்றிக் கெடும்"***

***(குறள்.116)***

என ஒரு மனிதனுக்குரிய உடையின் தேவையினை பதிவிடுகின்றார். இதனையே ஔவைப் பிராட்டியும்

**உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைந்து எண்ணுவன**
**கண்புதைந்த மாந்தர் குடிவாழ்க்கை**
**மண்ணின் கலம்போலச் சாந்துணையும்**
**சஞ்சலமே**

***(நல்வழி - 28 )***

எனும் வெண்பாவில் மனிதனின் தேவை என்பது உண்பது நாழி அளவு தான் உடுப்பது நான்கு முழம் தான் அதை மீறி எண்பது கோடி செயல்களுக்கு ஆசைப்பட்டு வாழ்வில் வருத்தப்பட வேண்டாம் என்கிறார். மண்கலம் போல உடையப் போகும் வாழ்க்கையில் அளவுக்கு மீறிய ஆசை எப்போதும் வருத்தத்தையே தரும் என்கிறார்.

மானம் மறைக்க நான்கு முழம் போது மென்றாலும் பல வகையான ஆடை களில் மனித மனம் நாட்டம் கொள்கிறது என்கிறார் ஔவையார்.

### இயேசு கிறிஸ்துவும்

பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதுடன் உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பது டன் அன்றோ நான் விரும்பும் நோன்பு (ஏசாயா 58:7) என்கிறார்.

### இயேசு கிறிஸ்துவும்

**"நாம் அணிந்திருக்கும் உடையின் மூலமாக நாம் பிறருக்கு இடறலை ஏற்படுத்து வோம்**
**என்றால் ஐயோ வந்து சேரும்"**

என்றும் நாம் அணியும் ஆடையில் நாகரிகம் வேண்டும். நமது பண்பாட்டின் வெளிப்பாடாக ஆடை அமைந்துள்ளது என்று இயேசு கிறிஸ்து ஆடை அணிவதில் கவனம் வேண்டும் என குறிப்பிடுகின்றார் (மத்தேயு 18:7)

**"உடுத்த ஆடை நீருள் பிழியார்"**
**(ஆசாரக்கோவை பா- 10)**

உடுத்தியிருக்கின்ற ஆடையை நீருக்குள் பிழியக் கூடாது என்று கூறுகின்றது ஆசாரக் கோவை.

### உறைவிடத்தின் இன்றியமையாமை

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உறைவிடம் இன்றியமையாததாக அமைந்துள்ளது. இன்றைய சூழலில் வசதி வாய்ப்புகளுடன் கூடிய உறைவிடம் அமைத்தல் என்பது மக்களின் கனவாகவும் மேலோங்கி வருகின்றது. வறுமையில் வாழும் எளியோருக்கு வீடு கட்டுதல் என்பது எட்டாக் கனியாகவும் திகழ்கின்றது. தன் கையிலுள்ள பொருள் அனைத்தும் அழியும் படியாக வீடுகட்டுதல் கூடாது என்பதனை

**" இடம்பட வீடு எடேல்"**
**(ஆத்திச்சூடி பா.18)**

என்று வீடு கட்டும் போது எளிமையான முறையில் தேவைக்கேற்ப கட்டினால் போது மானது என்றும் வீட்டினைச் சிறுகக் கட்டிப் பெருக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைக்கின்றார் ஔவையார். அவ்வாறு கட்டி முடிக்கப்பெற்ற இல்லத்தில் அதிகாலையிலேயே துயில் எழுந்து குப்பைகளை நீக்கிக் கருங்கலங்களைக் கழுவி தன் வீட்டுப் பசுஞ்சாணத்தால் வீட்டின் சுற்றுப் பகுதிகளில் தெளித்து நீர்ச்சால் கரகம் போன்றவற்றால் நிறை மலர் அணிந்து இல்லம் பொலியும்படி அடுப்பினுள் தீ மூட்ட வேண்டும் என்பதனை

**" காட்டுக் களைந்து கலங்கழிஇ ல்லத்தை**
**ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை**
**நீர்ச்சால் கரக நிறைய மலரணிந்து**
**இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க**
**நல்லதுறல் வேண்டுவார்"**
**(ஆராசக்கோவை பா- 46 )**

என ஆராசக்கோவை பதிவிடுகின்றது

**"கடவுளின் அன்புக்குப் பாத்திரமான மனிதனாக வாழ்வது தான் பரலோகத் தந்தையின் ஆசிர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்" (பிரசங்கி 2:9-11)**

எனும் வரிகள் வாழ்வின் நிலையாமையை எடுத்துரைத்து நிலையான செல்வமாகத் திகழ்வது இறைமகனாரின் அன்பினைப் பெறுவது மட்டுமே என முன்வைக்கின்றது.

### முடிவுரை

மனிதன் உயிர் வாழ்த் தேவையான உணவு உடை உறைவிடம் என்பவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்றும் சமத்துவ நெறியனையும் அளவோடு உண்டு வளமாக வாழும் முறையைக் கடைப்பிடிப்பதோடு பசியாய் வாழுவோருக்கு உணவளிக்கும் பாங்கினையும் அறிய முடிகின்றது. அதிகாலையில் துயிலெழுந்து நீராடித் தூய ஆடை அணிந்து நோய் நொடி இல்லாமல்

வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளை உணர முடிகின்றது. நாம் வாழும் இடமும் சுற்றுப்புறமும் சுகாதாரமான முறையில் பராமாரிக்க வேண்டும் என்ற நிலையை அற இலக்கியங்களும் திருவிவிலியமும் எடுத்து ரைக்கும் முறையை இக்கட்டுரையில் அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. வை.மு.கோபாலகிருஷ்ணமாச் சாரியார். திருக்குறள். உமா பதிப்பகம் 2009
2. வேம்பத்தூர் கிருஷ்ணன் - ஔவைத் தமிழ் மாலை சுடர் மணிப் பதிப்பகம் 2007
3. பரிசுத்த வேதாகமம் - இந்திய வேதாகமச் சங்ம் பெங்களூர்.1971.
4. புதிய ஏற்பாடு - பைபிள் சொசைட்டி ஆம் இந்தியா 1968